மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மவுண்ட் ரோடாக இருந்தாலும், அல்லது சைதாப்பேட்டையாக இருந் தாலும் ஒரு குறிப்பிட்ட அளவு பூமிக்கு நாம் விதி விலக்கு அளித்திருக்கிறோம். ஏற்கெனவே இருந்த சட்டத்தில் விதிவிலக்கு இல்லை. புதிதாக கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத்தில் தான் விதி விலக்கு அளித்து, ஏழை எளிய மக்களுக்கு இந்த அர்பன் லேண்ட் டாக்ஸ்-லிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்ற நல்ல கருத்தின் அடிப்படையில் தான் இந்த புதிய முறையை புகுத்தியிருக்கிறோமே தவிர வேறு அல்ல.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த அர்பன் லேண்ட் டாக்ஸ் பற்றி பல முறை இங்கே பேசி 1½ கிரௌண்ட் என்று ஸ்திரப்படுத்தி விட்டார்கள். காரணம், கனம் முதலமைச்சர் அவர்களுடைய வீடு 1½ கிரௌண்ட் இருப்பதால் பார்ஷியாலிடி வந்துவிடும் என்று கருதினார்களோ என்னவோ தெரியவில்லை. நல்லார் ஒருவரால் எல்லோருக்கும் மழை பெய்யும் என்று சொல்வதைப்போல், 1½ கிரௌண்டு கொண்ட வீடு கனம் முதல் அமைச்சருடையதாயிருந்தாலும் இந்த 1½ கிரௌண்டுக்கு விதி விலக்கு கொடுத்தால் நன்றாக இருக்கும். அதை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தற்போது அப்படி யோசனை இல்லை.

பெரிய பள்ளிப்பாளையம் கிராமத்திலுள்ள பொதுப்பணித்துறை நிலங்கள்

*724 வினா—திரு. சி. க. வடிவேலு : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டம், பெரிய பள்ளிப்பாளையம் கிராமத்தில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சர்வே எண். 183, 184, 185 என்ற இடங்களில் தனி நபர்கள் ஆக்கிர மிப்பு செய்துள்ளதை காலி செய்யும்படி அரசாங்கம் உத்திரவு அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1972 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டம், பெரியபள்ளிப்பாளையம் கிராமத்தில் 183, 184, 185 ஆகிய சர்வே எண்களைக்கொண்ட நிலங்கள் பட்டா நிலங்கள். ஆகையால் இந்நிலங்களிலிருந்து யாரையும் காலி செய்வதுபற்றி அரசு எவ்வித உத்திரவும் அனுப்பவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

New post of Chief Engineer

* 725 *Q.*—DR. H.V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have created a new post of a Chief Engineer to be exclusively in charge of works relating to national highways in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை வேலைகளையும், இதர மத்திய அரசு பொறுப்பிலுள்ள சாலைத் திட்டங்களையும் கவனிக்கும் பொறுப்பிற்காக தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைகள்) என்ற பெயரில் ஒரு தலைமைப் பொறியாளர் பதவியையும், அவருக்கான பணியாளர்களையும் ஏற்படுத்த பொதுப்பணித்துறை 16—9—1971 நாளிட்ட அரசு ஆணை எண் 1933-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இன்றைக்கு மத்திய அரசுக்கு சொந்தமாக இருக்கும் நெடுஞ்சாலையில் குடிநீருக்காக பைப் போடுவதற்கு சில சிரமங்கள் ஏற்படுகிறதே, அது சம்பந்தமாக இந்தப் பொறியாளர் அவர்கள் பொறுப்பு எடுத்து அம்மாதிரியான சிக்கல்களை தீர்ப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் தலைமைப் பொறியாளருக்கு அனுமதி கொடுக்கும் அதிகாரம் கிடையாது. இந்தத் தலைமைப் பொறியாளர் மத்திய அரசுக்கு எழுதித்தான் தேசீய நெடுஞ்சாலைகளின் குறுக்கே வெட்டுவதற்கு, பைப் அமைக்கும் பணிகளைச் செய்ய அனுமதி பெறுவார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: இந்த சீப் இன்ஜினீர், நேஷனல் ஹைவேஸ் அலுவலகத்தின் நிர்வாகச் செலவை மத்திய சர்க்கார்